தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2023

## 13 வயதுப்பிரிவு

(01.01.2010 – 31.12.2011 வரையில் பிறந்தோர்)

### வல்லமை தரும் மாவீரர்

தமிழராகிய நாம் உலகின் மூத்தகுடி எனும் பெருமை கொண்டவர்கள். தொன்மையும் செழுமையும் மிக்க தமிழ்மொழி எங்கள் தாய்மொழி. அறமும் அடிபணியாத வீரமும் ஆய்ந்து அறிந்த கல்வியும் எமது சொத்துகள். காலத்தின் நீட்சியில் கரைந்து அழிந்து விடாமல், பதியமிட்டுப் பதியமிட்டுப் பக்குவமாய் வளர்க்கப்பட்டது தமிழினத்தின் இனமான உணர்வு.

“ஒற்றைத் தமிழ்மகன் உள்ளவரை உள்ளத்தே
அற்றைத் தமிழ்த்தாய் ஆட்சி புரியும் வரை
மற்றை இனத்தார்க்கே மண்டியிடான்; மண்டியிட்டால்
பெற்றவர் மேல் ஐயம்; பிறப்பின் மேல் ஐயமெனச்
சற்றும் தயக்கமின்றிச் சாற்று”

என்ற மானத்தமிழ்ப் புலவன் பெருங்குமுறல், நாடி நரம்பெல்லாம் ஓடி உரமேற, தானைப் படை நடத்தி ஈனர் பகை எதிர்த்த தமிழீழத் தேசியத் தலைவரின் வழிநடக்கும் மானத்தமிழ்ப்பிள்ளை நான் என்று மாவீரர்கள் மீது உறுதி எடுத்து மார்தட்டிக்கொள்கிறேன்.

கரந்தடிப் படையாகப் பிறப்பெடுத்து, மரபுவழிப் படையாக வளர்ந்து தரைப்படை, கடற்படை, வான்படை எனும் முப்படைக்குள்ளும் பல படைக்கட்டுமானங்களை உருவாக்கி கரும்புலிப்படையும் அணிசேர, படைவலுச் சமனிலை மேலோங்கி, நிமிர்ந்து நின்றது எங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு என்பதைப் பெருமிதத்தோடு பதிவு செய்கிறேன். வல்லரசுகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது, வரித்துக் கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று, அமைதிவழிப்போரிலும் ஆயுதப்போரிலும் சிகரம் தொட்டு நின்றது தமிழீழ விடுதலைப் போராட்டம். அது பதித்த வெற்றிச் சரித்திரங்கள் காலத்தால் அழியாதவை.

முதல் மாவீரர் லெப்டினனட் சங்கர் மாமா தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரை மண்டியிடாது காவியம் படைத்த அத்தனை மாவீரர்களும் எங்கள் வீரத்தின் வித்துகள். ‘தமிழர் என்றோர் இனமுண்டு; தனியே அதற்கோர் குணமுண்டு’ என்பதை மீண்டும் மீண்டும் வையகத்துக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்ற எங்கள் தேசத்து நாயகர்கள். என்றென்றும் எம் மூச்சாகவும் செயல் வீச்சாகவும் இருப்பவர்கள் இந்த வீரமறவர்கள்தான்!

தமிழருக்கான தனிநாடு அமைக்க உயிரால் உரம் ஊட்டிய சந்தனப்பேழைகளே! வீர சுதந்திரப் போராட்ட வரலாற்றின் நாயகர்களே! தாயகக் கனவுடன் விழிகளை மூடிய கண்மணிகளே! நாம் உறுதி தளராது உரிமைப் போர் நடத்த எமக்கு வல்லமை தருபவர்களும் நீங்களே!

வீரச்சாவடைகின்ற கணம் வரை, தாம் நேசித்த தலைவனையும் மக்களையும் தாய்மண்ணின் விடிவையும் மட்டுமே சுவாசித்துச் சென்ற உத்தமர்களே! உங்களின் அளப்பரிய தியாகங்கள் எம்மை வழிநடத்த, உங்கள் வழியில் நாங்கள் நிற்கிறோம். தமிழீழத் தாய்நாட்டை நிச்சயம் மீட்டாள்வோம்.

“தமிழரின் தாயகம் தமிழீழத் தாயகம்”